# திருவேற்காடு நகராட்சி
## நகர்மன்ற அவசரக் கூட்டம்

**2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 05.00 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

**நாள்: 11.12.2020**

---

## பொருள் எண்.1

திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சிறப்பு சாலை திட்டம் 2020–21ன் கீழ் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20557/2020/இ3 நாள்.11.12.2020 ஆம் தேதியிட்ட கடிதத்தில், தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட நிதி (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| திருவேற்காடு | 7.00 | 5.95 | 1.05 |

எனவே, மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பணிகளை மேற்படி அரசு நிதி மற்றும் நகராட்சி பங்களிப்புடன் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றி நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண். | பணியின் விவரம் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (கி.மீ) | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1. | 1 & 4 | பாலாஜி நகர், தினேஷ் நகர், காந்தி தெரு, திருவள்ளூர் தெரு, செந்தில் நகர், மாசிலாமணி தெரு, மயான சாலை, ஐஸ்வர்யா நகர் 1வது பிரதான சாலை, 2வது பிரதான சாலை, 3வது பிரதான சாலை, 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு, 4வது தெரு, 6வது தெரு மற்றும் ஜோதி நகர் பகுதிக்கு தார்தளம் புதுப்பித்தல். | 3.786 | 4.10 – 5.50 | 1.40 |
| 2. | 3, 4 & 5 | கீழ்அயனம்பாக்கம் சேவைச் சாலைக்கு மற்றும் தமிழ் தெருவிற்கு தார்தளம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். கக்கன்ஜி தெரு, கேலக்ஸி பிரதான சாலை, 1வது தெரு மற்றும் குறுக்கு தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 1.456 | 4.10 – 5.50 | 1.40 |
| 3. | 6, 7 & 10 | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் பிரதான சாலை, 1வது பிரதான சாலை, 4வது பிரதான சாலை, 6வது பிரதான சாலை, 7வது பிரதான சாலை, நந்தகுமார் தெரு, வடநூம்பல் பிள்ளையார் கோயில் தெரு, கேந்திரிய விஹார், ராஜீவ் நகர் வெள்ளாளர் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, எம்.ஜி.ஆர் தெரு, காந்தி தெரு மற்றும் பொன்னியம்மன் கோயில் தெருவிற்கு தார்தளம் புதுப்பித்தல். | 3.332 | 4.10 – 8.00 | 1.40 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | 15 | ஸ்ரீதேவி நகர் 1வது, 2வது, 3வது மற்றும் 4வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 0.765 | 4.10 | 1.40 |
| 5. | 7,15, & 16 | மகாலட்சுமி நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் தார்தளம் அமைத்தல், சிவன் கோயில் பிரதான சாலைக்கு தார்தளம் புதுப்பித்தல் மற்றும் காடுவெட்டி மேட்டுப்பாளையம் சாலையினை அகலப்படுத்தி தார்தளம் அமைத்தல். | 1.550 | 6.00 – 8.00 | 1.40 |
| | | **மொத்தம்** | **10.889** | | **7.00** |

**அலுவலக குறிப்பு :–**

அ) ஒப்புதல் அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1327** **நாள்.11.12.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.2

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி வட்டம் திருவேற்காடு நகராட்சி, அயனம்பாக்கம் வருவாய் கிராமம், நில அளவை எண் 281/2ல் அடங்கிய விஸ்தீரணம் 0.24.0 ஏர்ஸ் களம் வகைப்பாடு கொண்ட புலத்தில், வீடுகள் கட்டி குடியிருந்து வருபவர்களில் 14 நபர்களுக்கு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி வீட்டுமனை பட்டா வழங்கிட கருத்துரு அனுப்பிடுவது தொடர்பாக நகராட்சி தீர்மானம் வழங்கிட கேட்டு பூந்தமல்லி வட்டாட்சியர் தனது கடித எண் 2709/2020/ஆ2 நாள் 20.11.2020ல் கோரியுள்ளார். மேற்காணும் கோரிக்கை குறித்து நகரமைப்பு ஆய்வர் தனது குறிப்பில், புலத்தில் வீடுகள் கட்டி பலர் குடியிருந்து வருகின்றனர் எனவும், மேற்காணும் இடம் களம் வகைப்பாட்டில் உள்ளது எனவும், மேற்படி அரசு புறம்போக்கு இடம் வருவாய்துறைக்கு சொந்தமானது எனவும், எனவே மேற்காணும் இடத்தில் வீட்டுமனை பட்டா வழங்குவது குறித்து நகராட்சிக்கு ஆட்சேபணை ஏதுமில்லை என்பதை தெரிவித்திடலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி வட்டம் திருவேற்காடு நகராட்சி, அயனம்பாக்கம் வருவாய் கிராமம், நில அளவை எண் 281/2ல் அடங்கிய விஸ்தீரணம் 0.24.0 ஏர்ஸ்,ல் வருவாய்துறைக்கு சொந்தமான களம் வகைப்பாடு கொண்ட புலத்தில், வீடுகள் கட்டி குடியிருந்து வரும் நபர்களுக்கு, வருவாய் துறையினால் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி வீட்டுமனை பட்டா வழங்கிட நகராட்சிக்கு ஆட்சேபணை ஏதுமில்லை என்பதை பூந்தமல்லி வட்டாட்சியருக்கு தெரிவித்திட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.4721/2020/F1)

**நகர்மன்ற தீர்மான எண்.1328** **நாள்.11.12.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.3

பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியம் பாரிவாக்கம் கிராமம் புல எண் 3, 7 மற்றும் பல, ஆகிய எண்களில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு சாலை பகுதி திருவேற்காடு நகராட்சி வீரராகவபுரம் கிராமம் புல எண் 104/2A part, 2B part, 105/1 part, 106/1Apart. 1B1B part. 1B2 part, 2D1 part, 125 part, 128 part. 136/4A part, 137/2 part ஆகியவற்றில் அமைந்துள்ளது. மேற்காணும் மனைப்பிரிவு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினால் ஒப்புதல் செய்யப்பட்டு இறுதி ஒப்புதலுக்கு பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியத்திற்கு வரப்பெற்ற போது மேற்கண்ட சாலைப்பகுதிக்கு சாலைஅமைத்தல், தெருவிளக்கு அமைத்தல், வடிகால் அமைத்தல், குடிநீர் தடம் அமைத்தல், ஆகிய பணிகளுக்கு செய்திட உரிய அனுமதி கேட்டு திருவாளர்கள் ஷமீரா ஷெல்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், விண்ணப்பித்திருந்தனர். மேற்காணும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருவதாகவும் விரைவில் முடித்துவிடுவதாகவும் மேற்படி நிறுவனத்தார் தெரிவித்ததன் அடிப்படையில் மேற்காணும் பணிகளுக்காக வைப்பு தொகையாக ரூ.69இலட்சம் நகராட்சிக்கு செலுத்திடவும் மேற்படி தொகையினை பணிகள் முடிவுற்ற பின்னர் வைப்பு தொகை அந்நிறுவனத்தாருக்கு திரும்ப வழங்கப்படும் என நகராட்சி கடித எண் 3592/2018/எப்1 நாள் 15.04.2019 இல் மேற்படி நிறுவனத்தாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. சாலைப்பகுதிகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தாரால் நகராட்சிக்கு தானமளிக்கப்பட்டு குன்றத்தூர்

சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஆவண எண் 6152 /2019). மேற்காணும் வைப்புத்தொகை ரூ.69இலட்சத்துக்கு அந்நிறுவனத்தாரால், 15.04.2019ம் தேதிய வங்கி வரைவோலை மூலம் நகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது மேற்படி பணிகளை முடித்துவிட்டதாகவும் அதனால் வைப்புத்தொகையாக மேற்படி நிறுவனத்தாரால் செலுத்தப்பட்ட வைப்புத்தொகையினை திரும்ப வழங்கிட கேட்டு மேற்படி நிறுவனத்தார் 07.11.2019 அன்று விண்ணப்பித்துள்ளனர். மேற்காணும் வைப்புத் தொகையினை திரும்ப வழங்குவது குறித்து வழக்கறிஞர் திரு. ஸ்ரீனிவாஸ் அவர்களிடம் சட்டக்கருத்து கோரப்பட்டதில் பின்வருமாறு தனது சட்டக்கருத்தினை வழங்கியுள்ளார்.

> This opinion is issued in view of the fact that provisions of Section 175,176,177 and 178 of the TNDM Act provide that the persons forming a layout or disposing off sites as house sites have to form the streets, provide lighting, paving, etc, as per the direction of the Municipality. If they fail to do so, then the Municipality can carry out the said works and collect the cost of such work from the owner of the said lands that are reached by the said streets. In the present case, since the works have been completed, the amount is not payable by the land owner.
>
> Therefore, I am of the opinion that the amount paid by the layout applicant for the purpose of formation of the streets, channels , streetlights etc as per the estimates dated 15.03.2019 can be refunded to the applicant after verifying as to whether the works as per the above estimates have been completed or not.

நகராட்சி கடித எண் 3592/2018/எப்1 நாள் 15.04.2019 இல் தெரிவித்துள்ள அடிப்படை வசதி பணிகள் அனைத்தும் முடிவுற்றதாக நகராட்சி பொறியாளர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். எனவே மேற்காணும் நகராட்சி கடிதத்தில் வைப்புதொகை திரும்ப வழங்குவது குறித்து தெரிவித்துள்ள நிபந்தனைகள், வழக்கறிஞரின் 19.11.2020ம் தேதிய சட்டக்கருத்து, நகராட்சி பொறியாளரின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், நகராட்சி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை வசதி பணிகளுக்காக திருவாளர்கள் ஷமீரா ஷெல்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், அவர்கள் செலுத்திய வைப்புத் தொகை ரூ.69 இலட்சத்தினை திரும்ப வழங்கிட மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

நகராட்சி கடித எண் 3592/2018/எப்1 நாள் 15.04.2019 இல் வைப்புதொகை திரும்ப வழங்குவது குறித்து தெரிவித்துள்ள நிபந்தனைகள், வழக்கறிஞரின் 19.11.2020ம் தேதிய சட்டக்கருத்து, நகராட்சி பொறியாளரின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், நகராட்சி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை வசதி பணிகளுக்காக திருவாளர்கள் ஷமீரா ஷெல்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், அவர்கள் செலுத்திய வைப்புத் தொகை ரூ.69 இலட்சத்தினை அந்நிறுவனத்தாருக்கு திரும்ப வழங்கிட அனுமதிக்கலாம்.

**( 3598/2018/எப்1)**

**நகர்மன்ற தீர்மான எண்.1329** **நாள்.11.12.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.4</u>

பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியம் பாரிவாக்கம் கிராமம் புல எண் 3, 7 மற்றும் பல, ஆகிய எண்களில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு சாலை பகுதி திருவேற்காடு நகராட்சி வீரராகவபுரம் கிராமம் புல எண் 104/2A part, 2B part, 105/1 part, 106/1Apart. 1B1B part. 1B2 part, 2D1 part, 125 part, 128 part. 136/4A part, 137/2 part ஆகியவற்றில் அமைந்துள்ளது. மேற்காணும் மனைப்பிரிவு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினால் ஒப்புதல் செய்யப்பட்டு இறுதி ஒப்புதலுக்கு பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியத்திற்கு வரப்பெற்ற போது மேற்கண்ட சாலைப்பகுதிக்கு சாலைஅமைத்தல், தெருவிளக்கு அமைத்தல், வடிகால் அமைத்தல், குடிநீர் தடம் அமைத்தல், ஆகிய பணிகளுக்கு செய்திட உரிய அனுமதி கேட்டு திருவாளர்கள் ஷமீரா ஷெல்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், விண்ணப்பித்திருந்தனர். மேற்காணும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருவதாகவும் விரைவில் முடித்துவிடுவதாகவும் மேற்படி நிறுவனத்தார் தெரிவித்ததன் அடிப்படையில் மேற்காணும் பணிகளுக்காக வைப்பு தொகையாக ரூ.69இலட்சம் நகராட்சிக்கு செலுத்திடவும் மேற்படி தொகையினை பணிகள் முடிவுற்ற பின்னர் வைப்பு தொகை அந்நிறுவனத்தாருக்கு திரும்ப வழங்கப்படும் என நகராட்சி கடித எண்

3592/2018/எப்1 நாள் 15.04.2019 இல் மேற்படி நிறுவனத்தாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. சாலைப்பகுதிகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தாரால் நகராட்சிக்கு தானமளிக்கப்பட்டு குன்றத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஆவண எண் 6152 /2019). மேற்காணும் வைப்புத்தொகை ரூ.69இலட்சத்துக்கு அந்நிறுவனத்தாரால், 15.04.2019ம் தேதிய வங்கி வரைவோலை மூலம் நகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது மேற்படி பணிகளை முடித்துவிட்டதாகவும் அதனால் வைப்புத்தொகையாக மேற்படி நிறுவனத்தாரால் செலுத்தப்பட்ட வைப்புத்தொகையினை திரும்ப வழங்கிட கேட்டு மேற்படி நிறுவனத்தார் 07.11.2019 அன்று விண்ணப்பித்துள்ளனர். மேற்காணும் வைப்புத் தொகையினை திரும்ப வழங்குவது குறித்து வழக்கறிஞர் திரு. ஸ்ரீனிவாஸ் அவர்களிடம் சட்டக்கருத்து கோரப்பட்டதில் 19.11.2019 அன்று தனது சட்டக்கருத்தினை வழங்கியுள்ளார். மேற்காணும் சட்ட கருத்து வழங்கியமைக்கு சட்ட கட்டணம் ரூ.5000/– வழங்கிட மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

இந்நேர்வில் வழக்கறிஞர் திரு. ஸ்ரீனிவாஸ் அவர்கள் 19.11.2019 அன்று தனது சட்டக்கருத்தினை வழங்கியுள்ளதற்கு சட்ட கட்டணம் ரூ.5000/– வழங்கிட வழங்கிட அனுமதிக்கலாம். (3598/2018/எப்1)

**நகர்மன்ற தீர்மான எண்.1330** **நாள்.11.12.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.5

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020–21ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 01.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கீழ்அயனம்பாக்கம் மயான சாலைக்கு (Burial Ground) தார்தளம் அமைத்தல். | 8.50 | 1.M. கார்த்திக்<br>2.M/s.திருமலை கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.85 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | அயனம்பாக்கம் மயானத்திற்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல். | 6.50 | 1.M. கார்த்திக்<br>2.M/s.திருமலை கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.18 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.20 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | எல்லையம்மன் கோயில் தெருவில் இந்நகாட்சிக்கு சொந்தமான சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதி மேற்கொள்ளுதல் | 9.90 | 1.M. கார்த்திக்<br>2.M/s.திருமலை கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.20 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.25% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி பணிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1331** **நாள்.11.12.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள் எண்.6**

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020–21ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 04.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | அயனம்பாக்கம் இராஜாங்குப்பம் யாதவர் தெரு பகுதிக்கு பேவர் பிளாக் வசதி மேற்கொள்ளுதல். | 9.90 | 1.M./s.ஆரோக்கியநாதன் கண்ஸ்ட்ரக்ஸன்<br><br>2.திரு. G.மதிவேலன் | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.95 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | வானகரம் அம்பத்தூர் பிரதான சாலைக்கு சிமெண்ட் தளம் கொண்ட (RCC) சிறுபாலம் அமைத்தல். | 4.80 | 1. திரு R. சகாதேவன்<br><br>2.திரு. V.பார்த்திபன் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.55 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | அக்ரஹாரம் குறுக்கு சாலையினை செப்பணிடும் பணி மேற்கொள்ளுதல். | 3.80 | 1.M/s.Mars Constrction<br><br>2.M/s.Shanmugavel Construction | 0.20 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.05 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி பணிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1332** **நாள்.11.12.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

ஒம்/– தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி.

/உண்மை நகல்/
ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி.